# சம்ஸ்கிருத ஆய்வாளருக்கு குடியரசுத் தலைவர் விருது

**புதுச்சேரி, செப். 2:** ஓலைச்சுவடிகளை கண்டறிந்து அவற்றை நூலாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றும் சம்ஸ்கிருத ஆய்வாளர் தேவி பிரசாத் மிஸ்ரா (42), குடியரசுத் தலைவர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவர் ஆற்றிய சம்ஸ்கிருத மொழி மற்றும் இலக்கிய பணிக்காக இவ்விருது வழங்கப்பட உள்ளது.

இதில் சான்றிதழ், நினைவுப் பரிசு மற்றும் ரூ. 1 லட்சம் ரொக்கப்பரிசு ஆகியவை அடங்கும். மகரிஷி பத்ரயன் வியாஸ் சம்மான் விருது, சம்ஸ்கிருதத்தில் சிறப்பாக பணியாற்றும் இளம் ஆராய்ச்சியாளர் என்ற முறையில் இவ்விருது தரப்படுகிறது. கடந்த 99-ம் ஆண்டு இவ்விருது தொடங்கப்பட்டது.

30 வயது முதல் 45 வயதுயுடையோர் இவ்விருதுக்காக தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.